ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
| திகதி | 2019 செத்தெம்பர் 03 |

**இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவானது இலங்கை கூட்டுறுதி தொடர்மாடிமனை அதிகாரசபை மற்றும் தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை என்பனவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கிறது.**

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளில், கூட்டுறுதி தொடர்மாடிமனை அபிவிருத்தியாளர்கள் மற்றும் இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள் தொடர்பில் பணம் தூயதாக்கலைத் தடுத்தல்/ பயங்கரவாததத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பற்றிய சட்ட ரீதியான கடப்பாடுகள் காத்திரமான விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் கூட்டுறுதி தொடர்மாடிமனை முகாமைத்துவ அதிகாரசபையிடமிருந்தும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையிடமிருந்தும் நிதியியல் உளவறிதல் பிரிவு எதிர்பார்க்கின்றவாறு தகவல்களை வழங்குதல் மற்றும் ஆதரவுத் தன்மையினை வரைவிலக்கணப்படுத்துவது தொடர்பான செயன்முறைகளை மேலோட்டமாக அவற்றிற்குத் தெரிவிக்கும் விதத்தில் இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவானது இலங்கை தொடர்மாடிமனை முகாமைத்துவ அதிகாரசபையுடனும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடனும் 2019 ஒகத்து 28ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துகொண்டது.

நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் திரு. டி. எம். ரூபசிங்க அவர்களும் கூட்டுறுதி தொடர்மாடிமனை முகாமைத்துவ அதிகாரசபையின் தலைவர் திரு. சி. ஏ. விஜயவீர அவர்களும் தொடர்பான நிறுவனங்கள் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் பணம் தூயதாக்கலுக்குகெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் என்பனவற்றிற்கான தேசிய இணைப்புக் குழுவின் தலைவருமான முனைவர். இந்திரஜித் குமாரசுவாமியின் முன்னிலையில் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். அத்துடன் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின்

மேலதிகச் செயலாளரும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர்சபை உறுப்பினருமான திரு. கே. டி. சித்திரபாலா மற்றும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் திரு. துலிப் சோமிரத்ன அவர்களும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேற்கொள்வதற்காக சமூகமளித்திருந்தனர்.

உள்நாட்டு அதேபோன்று உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் முறைமைகளின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக விளங்கக்கூடிய பணம் தூயதாக்கலைத் தடுத்தல் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் நிதியியல் குற்றங்களுடன் தொடர்பான விடயங்களைத் தடுப்பது தொடர்பில் நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளின் கீழ், கூட்டுறுதி தொடர்மாடிமனை அபிவிருத்தியாளர்களும் உரிமம்பெற்ற இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள் உள்ளிட்ட உண்மைச் சொத்து முகவர்களும் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பிற்கு இணங்கியொழுகுவது கட்டாயக்கடப்பாடாகக் காணப்படுகிறது.

நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் பொருட்டு நிதியியல் உளவறிதல் பிரிவு 39 வெளிநாட்டு இணைத்தரப்பினருடனும் அதேபோன்று இலங்கைச் சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், உள்நாட்டு அரசிறைத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், இலங்கைப் பொலிஸ், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் போன்ற எட்டு உள்நாட்டு அரச முகவர்களுடனும் ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்திருக்கின்றது.



நிதியியல் உளவறிதல் பிரிவின் பணப்பாளர் திரு. டி. எம். ரூபசிங்க அவர்களும் கூட்டுறுதி தொடர்மாடிமனை அதிகாரசபையின் தலைவர் திரு. சி. ஏ. விஜயவீர அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைப் கைமாற்றிக் கொள்கின்றனர். இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி, இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர் திரு. எச். ஏ. கருணாரத்ன, இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திருமதி. எஸ். குணரத்ன அவர்களும் கூட்டுறுதி தொடர்மாடிமனை முகாமைத்துவ அதிகாரசபையின் முத்த அலுவலர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.



நிதியியல் உளவறிதல் பிரிவின் பணப்பாளர் திரு. டி. எம். ரூபசிங்க அவர்களும் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் திரு. சேமிரத்ன அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைப் கைமாற்றிக் கொள்கின்றனர். இந்நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி, இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநர் திரு. எச். ஏ. கருணாரத்ன, இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் திருமதி. எஸ். குணரத்ன அவர்களும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. கே. டி. சித்திரபாலா அவர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.